OS 166/2020

பி.வா.சா.2 அசோக் த/பெ பாலு

நாள் 08.04.2026

**குறுக்கு விசாரணை**

1. நானும் பிரதிவாதி உதயகுமாரும் மற்றொரு சாட்சி பன்னீர் செல்வமும் ஆகியோர் ஒரே ஊரைச்சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதி சடையாண்டியை தெரியுமா என்றால் தெரியும் ஆரணியை சார்ந்தவர். என்ன பத்திரம் எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் 2019 கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 என்னிடம் படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் படித்து காண்பித்தார்கள் அதில் கிரைய ஒப்பந்தம் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தேதியில் உதயகுமார் சடையாண்டியிடம் இருந்து எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூ.4லட்சம் வாங்கினார். கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட சொத்து சர்வே எண் மற்றும் அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னை சாட்சி கையொப்பம் போட யார் அழைத்தது என்றால் உதயகுமார் தான் அழைத்தார். வா.சா.ஆ.1ல் கடனுக்காக வட்டிக்காக ஆவணம் எழுதப்பட்டதாக விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1ஐ தவிர கடனுக்காக மற்றும் வட்டிக்காக ஆவணம் வேறு ஏதேனும் எழுதப்பட்டதா என்றால் இல்லை.

2. வட்டிக்காக பணம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் பிரதிவாதி மாதந்தோறும் வட்டி கொடுத்ததாக சொன்னார் எனக்கு நேரடியாக தெரியாது. கிரைய ஒப்பந்தமாக எழுதி கொடுத்தால் தான் வாதி பணம் கொடுப்பதாக சொன்னாரா என்றால் பணத்தை திருப்பி கொடுத்தால் சொத்தை திருப்பி எழுதிகொடுத்துவிடுவதாக சொன்னார். கடனுக்காகவோ வட்டிக்காகவோ பணம் கொடுக்கப்படவில்லை என்றாலும் கிரையம் செய்து கொள்ள ஒப்பந்தம் போடப்பட்டது என்றாலும் சரியல்ல. அடமான ஆவணம் எழுதி வாங்க மறுத்துவிட்டாரா என்றால் ஆமாம். சொத்தின் மூலப்பத்திரம் பிரதிவாதி வாதியிடம் கொடுத்திருக்கிறார் என்றால் ஆமாம் கொடுத்திருக்கிறார். பிரதிவாதி ஊரை சார்ந்தவர் என்பதால் அவர் சொல்லி கொடுத்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.